14.02.2020. C.C.No.247/2003
அ.சா.5 திருமதி.ஆரோக்ய ஜாக்லின் சகுந்தலா , க/பெ.அருளானந்தம்
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

ஆசிரியராகிய நான் வங்கியில் கடன் பெற வேண்டுமெனில் சம்பளம் வழங்கும் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அவ்வாறு பெறவேண்டியதில்லை. ஒவ்வொரு மாதமும் மேற்படி கடனை சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளலாம் என உறுதிகூறி கையொப்பம் செய்வோம் என்றால் அவ்வாறு வாங்கவில்லை. பணத்தை ரொக்கமாக தான் செலுத்தினேன். பணம் செலுத்தும்போது அதற்கான இரசீது எங்களுக்கு கொடுக்கப்படும் என்றால் சரிதான். பணத்தை எதிரியிடம் கொடுத்தோம். அவர் இரசீது போட்டு எங்களிடம் கொடுப்பார். வேறு யாரிடமும் பணம் செலுத்தினேனா என்றால் எதிரியிடம் தான் செலுத்தினேன். பணம் செலுத்தியவுடன் இரசீது கொடுத்துவிடுவார் என்றால் சரிதான். மேற்படி இரசீதுகள் மற்றும் கடனை திருப்ப செலுத்தியதற்கான ஆவணங்களை போலீசார் விசாரிக்கும்போது கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கூட்டுறவு அதிகாரி என்னை எப்போது விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. வங்கியில் கடன் பாக்கி இல்லை என சான்றிதழ் பெற்று விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கடனை ஒழுங்காக திருப்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நாளது தேதிவரை எனது கடன் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

14.02.2020. C.C.No.247/2003
அ.சா.21 திரு.போஸ், த/பெ.சுப்பையா
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

மேற்படி கூட்டுறவு வங்கியில் தலைவராக இருக்கவேண்டுமெனில் ஏதாவது ஒரு பள்ளியில் ஆசிரியராக பணியில் இருக்க வேண்டும் என்றால் சரிதான். வங்கியில் ஆசிரியர்கள் கடன் வாங்கவேண்டுமெனில் விண்ணப்பங்களை பெற்று மத்திய வங்கியில் அனுமதி பெற்று அதனடிப்படையில் தான் கடன் அளிக்கப்படும் என்றால் செயலாளரிடம் விண்ணப்பங்கள் அளித்து அதனடிப்படையில் கடன் அளிப்பார்கள். கடன் வழங்க தீர்மானம் இயற்றி அதனடிப்படையில் கடன் அளிப்போம் என்றால் சரிதான். தீர்மானத்தில் என் கையொப்பம் இருக்கும் என்றால் மத்திய வங்கிக்கு அனுப்ப தீர்மானம் இயற்றியிருந்தால் எனது கையொப்பம் இருக்கும். மேற்படி சம்பளம் பிடித்தம் செய்யும் அதிகாரி யார் என்றால் மேற்படி கடனை ரொக்கமாகவோ, வேறு விதத்திலோ வங்கி செயலாளரிடம் தான் செலுத்துவார்கள். கடனை திருப்ப செலுத்தும்போது அதனை பெற்றுக்கொண்டு இரசீது கொடுப்பார்கள். அந்த புத்தகம் வங்கியில் இருக்கும் என்றால் சரிதான். எழுத்தர் மேற்படி வங்கியில் பணியில் இருந்தால் என்றால் இல்லை. என்னிடம் வந்து பணத்தை செலுத்துவார் என்றால் சரியல்ல. எதிரியிடம் தான் கொடுப்பார்கள். ஒரு தடவை 10 ஆசிரியர்கள் பணத்தை என்னிடம் கொடுத்தார்கள். நான் எதிரியிடம் கொடுத்து அதனை வங்கியில் கட்டும்படி கொடுத்தேன். அந்த கணக்கு இரசீதில் நான் தான் கையொப்பம் செய்தேன். நான் துறை ரீதியாக எதிரியின் மீது நடவடிக்கை எடுக்க கமுதியில் புகார் கொடுத்தேன். நான் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் வங்கி வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது என்றால் சரிதான். செயலாளரின் சம்பளம் எவ்வாறு கொடுக்கப்படும் என்றால் அது தீர்மானத்தின் அடிப்படையில் வங்கியின் மூலமாக அளிக்கப்படும். வங்கி கட்டிட வாடகை எவ்வாறு செலுத்தப்படும் என்றால் அதுவும் வங்கியின் விதிகளுக்குட்பட்டு செலுத்தப்படும். வாடகை மற்றும் சம்பளம் ஆகியன விதிமுறைகளுக்குட்பட்டு கொடுக்கப்பட்டது என்றாலும், அதனை விசாரணை அதிகாரி கணக்கில் கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியால் எந்தவித முறைகேடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.
மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

14.02.2020. C.C.No.247/2003

அ.சா.26 திருமதி.சௌந்திரவள்ளி, த/பெ.கோபால்சாமி

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

ஆசிரியராகிய நான் வங்கியில் கடன் பெற வேண்டுமெனில் சம்பளம் வழங்கும் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அவ்வாறு பெறவேண்டியதில்லை. ஒவ்வொரு மாதமும் மேற்படி கடனை சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளலாம் என உறுதிகூறி கையொப்பம் செய்வோம் என்றால் அவ்வாறு வாங்கவில்லை. பணத்தை ரொக்கமாக தான் செலுத்தினேன். பணம் செலுத்தும்போது அதற்கான இரசீது எங்களுக்கு கொடுக்கப்படும் என்றால் சரிதான். பணத்தை எதிரியிடம் கொடுத்தோம். அவர் இரசீது போட்டு எங்களிடம் கொடுப்பார். வேறு யாரிடமும் பணம் செலுத்தினேனா என்றால் எதிரியிடம் தான் செலுத்தினேன். பணம் செலுத்தியவுடன் இரசீது கொடுத்துவிடுவார் என்றால் சரிதான். மேற்படி இரசீதுகள் மற்றும் கடனை திருப்ப செலுத்தியதற்கான ஆவணங்களை போலீசார் விசாரிக்கும்போது கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கூட்டுறவு அதிகாரி என்னை எப்போது விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. வங்கியில் கடன் பாக்கி இல்லை என சான்றிதழ் பெற்று விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கடனை ஒழுங்காக திருப்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நாளது தேதிவரை எனது கடன் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

14.02.2020. C.C.No.247/2003
அ.சா.31 திருமதி.சூரியா, த/பெ.கிருஷ்ணன்
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

ஆசிரியராகிய நான் வங்கியில் கடன் பெற வேண்டுமெனில் சம்பளம் வழங்கும் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் அவ்வாறு பெறவேண்டியதில்லை. ஒவ்வொரு மாதமும் மேற்படி கடனை சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளலாம் என உறுதிகூறி கையொப்பம் செய்வோம் என்றால் அவ்வாறு வாங்கவில்லை. பணத்தை ரொக்கமாக தான் செலுத்தினேன். பணம் செலுத்தும்போது அதற்கான இரசீது எங்களுக்கு கொடுக்கப்படும் என்றால் சரிதான். பணத்தை எதிரியிடம் கொடுத்தோம். அவர் இரசீது போட்டு எங்களிடம் கொடுப்பார். வேறு யாரிடமும் பணம் செலுத்தினேனா என்றால் எதிரியிடம் தான் செலுத்தினேன். பணம் செலுத்தியவுடன் இரசீது கொடுத்துவிடுவார் என்றால் சரிதான். மேற்படி இரசீதுகள் மற்றும் கடனை திருப்ப செலுத்தியதற்கான ஆவணங்களை போலீசார் விசாரிக்கும்போது கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கூட்டுறவு அதிகாரி என்னை எப்போது விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. வங்கியில் கடன் பாக்கி இல்லை என சான்றிதழ் பெற்று விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் கடனை ஒழுங்காக திருப்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நாளது தேதிவரை எனது கடன் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.